ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2479/54 - 2026 මාර්තු මස 12 වැනි බ්‍රහස්පතින්දා - 2026.03.12

2479/54 ஆம் இலக்கம் - 2026 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 12 ஆந் திகதி வியாழக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

பகுதி I : தொகுதி (I) - பொது

இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள்

2023 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க இலங்கை மத்திய வங்கிச் சட்டம்

2023 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க இலங்கை மத்திய வங்கிச் சட்டத்தின் 106 மற்றும் 78(ஆ) ஆகிய பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 105 ஆம் பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட விதிகள்.

பி. நந்தலால் வீரசிங்க,
ஆளும் சபையின் தலைவரும்
இலங்கை மத்திய வங்கியின் ஆளுநரும்.

இலங்கை மத்திய வங்கி,
கொழும்பு,
2026, மாச்சு 11.

புள்ளிவிபரங்கள் மற்றும் தகவல்களைச் சேகரித்தல் மீதான விதிகள்

1. இவ்விதிகள் "2026 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க இலங்கை மத்திய வங்கியின் மூலம் புள்ளிவிபரங்கள் மற்றும் தகவல்களைச் சேகரித்தல் மீதான விதிகள்" என எடுத்துக்காட்டப்படுதல் வேண்டும்.

2. 2023 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க இலங்கை மத்திய வங்கிச் சட்டத்தின் (இதனகத்துப்பின்னர் "சட்டம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) 105 மற்றும் 106 ஆம் பிரிவுகளின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 78(ஆ) பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் செயற்பட்டு மத்திய வங்கியானது 2023 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க இலங்கை மத்திய வங்கிச் சட்டத்தின் அல்லது வேறு ஏதேனும் எழுத்திலான சட்டத்தின் கீழ் அதன் குறிக்கோள்களை அடைந்து கொள்வதற்கும் அதன் தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகளைச் செயற்றிறன்மிக்க விதத்தில் பிரயோகிப்பதற்கு, புரிவதற்கு மற்றும் நிறைவேற்றுவதற்கும் மத்திய வங்கியினால் தேவைப்படுத்தப்படுகின்ற புள்ளிவிபரங்கள் மற்றும் தகவல்கள் தொடர்பிலான விதிகளை இத்தால் விடுக்கின்றது.

இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

3. இச்சட்டத்தில் அல்லது வேறு ஏதேனும் எழுத்திலான சட்டத்தில் வேறு வகையில் குறிப்பாக அனுமதிக்கப்பட்டவாறன்றி, மத்திய வங்கியின் எவரேனும் பிரதி ஆளுநர் அல்லது பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களத்தின் பணிப்பாளர் அல்லது புள்ளிவிபரத் திணைக்களத்தின் பணிப்பாளர் (இதனகத்துப் பின்னர் "அதிகாரமளிக்கப்பட்ட அதிகாரி" எனக் குறிப்பீடு செய்யப்படும்) சட்டத்தின் கீழ் அல்லது அப்போது நடைமுறையிலுள்ள வேறு ஏதேனும் எழுத்திலான சட்டத்தின் கீழ் மத்திய வங்கியின் தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகளைச் செயற்றிறன்மிக்க விதத்தில் பிரயோகிப்பதற்கு, புரிவதற்கு மற்றும் நிறைவேற்றுவதற்கு அவர் அவசியமெனக் கருதக்கூடிய ஏதேனும் புள்ளிவிபரங்கள், தகவல்கள், தரவுகள் அல்லது ஆவணங்களை வாய்மொழி, எழுத்துமூலம் அல்லது இலத்திரனியல் வழிமுறையின் மூலம் (இதகனத்துப் பின்னர் "தகவல்கள்" எக் குறிப்பீடு செய்யப்படும்) அத்தகைய அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்டுள்ள காலப்பகுதிக்குள் கொடுத்துதவுமாறு, வழங்குமாறு அல்லது அளிக்குமாறு எவரேனும் ஆளொருவரை எழுத்துமூல அறிவித்தல் மூலம் எந்நேரத்திலும் கோருவதானது சட்டபூர்வமானதாதல் வேண்டும். அத்தகைய ஆளினால் வழங்கப்பட்ட ஏதேனும் தகவல்களை உறுதிப்படுத்தும் நோக்கத்திற்காக மேலதிக தகவல்களை அதிகாரமளிக்கப்பட்ட அதிகாரி கோரலாம்.

4. மேலே 3 ஆம் விதியின் கீழ் தரவுகளைச் சேகரிக்கின்ற மத்திய வங்கியின் அதிகாரமளிக்கப்பட்ட அதிகாரி :-

(i) புள்ளிவிபரங்களின் மற்றும் தகவல்களின் மூலங்களின் இரகசியத் தன்மையினைத் தொடர்புடைய வெளியீடுகள் வெளியிடப்படும் வரை பாதுகாத்தல் வேண்டும் ;

(ii) மத்திய வங்கிக்குக் கொடுத்துதவப்பட்ட, வழங்கப்பட்ட அல்லது அளிக்கப்பட்ட புள்ளிவிபரங்கள் மற்றும் தகவல்கள் என்பன அவை உட்கருதப்பட்ட நோக்கத்திற்காக மாத்திரமே பயன்படுத்தப்படுவதனை நிச்சயப்படுத்தல் வேண்டும்;

(iii) இவ்விதிகளின் கீழ் எவரேனும் குறித்த தனிநபரொருவரால் அல்லது நிறுவனத்தினால் கொடுத்துதவப்பட்ட, வழங்கப்பட்ட அல்லது அளிக்கப்பட்ட புள்ளிவிபரங்கள் மற்றும் தகவல்களைத் தனது தனிப்பட்ட நலனுக்காக வெளியிடலாகாது ; அல்லது

(iv) மேலே 3 ஆம் விதியின் கீழ் விடுக்கப்பட்ட அறிவித்தலை அனுசரித்து பெற்றுக்கொள்ளப்பட்ட புள்ளிவிபரங்களையும் தகவல்களையும் அணுகுவதற்கு, மீளாய்வு செய்வதற்கு, அல்லது பரீட்சிப்பதற்கு மத்திய வங்கியினால் புள்ளிவிபரங்களைத் தொகுத்தலில், பகுப்பாய்வு செய்தலில், நுண்மமாக்குதலில் மற்றும் தயாரித்தலில் ஈடுபடுவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட ஆட்களைத் தவிர எவரேனும் வேறு ஆளை அனுமதித்தலாகாது ;

5. எவரேனுமாள்

(i) மேலே 3 ஆம் விதியின் கீழ் விடுக்கப்பட்ட அறிவித்தலுக்கு இணங்கி தகவல்களை வழங்க மறுக்கின்றவிடத்து அல்லது உறுதி செய்வதற்கு தேவையான நியாயமான படிமுறைகளை மேற்கொள்ளத் தவறுகின்றவிடத்து ;

(ii) சமர்ப்பிக்கப்பட்ட எவையேனும் தகவலின் துல்லியத் தன்மையினை உறுதிப்படுத்துவதற்கு தேவையான அனைத்து நியாயமான படிமுறைகளையும் மேற்கொள்ளத் தவறுகின்றவிடத்து ;

(iii) 3 ஆம் விதியின் கீழ் விடுக்கப்பட்ட அறிவித்தலின் கீழ் மத்திய வங்கிக்கு வழங்கப்பட வேண்டிய அத்தகைய தகவல்கள் மற்றும் சான்றுகளில் வேண்டுமென்றே தவறான பதிவொன்றினைச் செய்கின்றவிடத்து அல்லது அத்தகைய புள்ளிவிபரங்கள் மற்றும் தகவல்களில் ஏதேனும் அத்தகைய பதிவினைச் செய்வதற்குக் காரணமாயமையுமிடத்து ; அல்லது

(iv) சட்டத்தின் கீழ் மத்திய வங்கியின் அதிகாரமளிக்கப்பட்ட அதிகாரிக்கு அளிக்கப்பட்டுள்ள தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகளைச் செயற்றிறன்மிக்க விதத்தில் பிரயோகிப்பதற்கு, புரிவதற்கு அல்லது நிறைவேற்றுவதற்கு அத்தகைய தகவல்களை அவ்வாள் சேகரிப்பதனைத் தடுக்கின்றவிடத்து அல்லது இடையூறு விளைவிக்குமிடத்து ;

அவர் இவ்விதிகளிற்கு முரணாகச் செயற்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன் அது சட்டத்தின் கீழ் தவறொன்றாகும்.

6. எவரேனுமாள் விடயத்திற்கேற்ப, 5(iii) அல்லது (iv) விதியின் அல்லது அத்தகைய இரு விதிகளின் கீழ் தவறொன்றினைப் புரிந்துள்ளவிடத்து, கோரப்பட்ட தகவல்கள் அத்தகைய ஆளினால் வழங்கப்படும் வரை அத்தவறினைத் தொடர்ச்சியான தவறொன்றாகக் கருதுதல் மத்திய வங்கிக்குச் சட்டபூர்வமானதாதல் வேண்டும்.

7. இவ்விதிகள் எத்திகதியன்று பாராளுமன்றத்தினால் ஒப்புதலளிக்கப்படுகின்றதோ அத்திகதியன்று அத்தகைய விதிகள் நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

8. இவ்விதிகளின் நோக்கங்களிற்காக,

"மத்திய வங்கி" என்பது, 2023 ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க இலங்கை மத்திய வங்கிச் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட இலங்கை மத்திய வங்கி எனப் பொருள்படுதல் வேண்டும் ;

"ஆளுநர்" என்பது, இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் எனப் பொருள்படுதல் வேண்டும்;

"ஆளும் சபை" என்பது, 2023 ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க இலங்கை மத்திய வங்கிச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழ் தாபிக்கப்பட்டட மத்திய வங்கியின் தீர்மானம் மேற்கொள்கின்ற குழு எனப் பொருள்படுதல் வேண்டும் ;

"தவறு" என்பது, மத்திய வங்கி அவற்றுக்கெதிராக நிர்வாக ரீதியிலான நடவடிக்கைகளை எடுக்கக்கூடியதான இவ்விதிகள் ஏதேனுமொன்றின் மீறுகை அல்லது ஏதேனுமொன்றுடன் இணங்கியொழுகத் தவறியமை அல்லது சட்டத்தின் கீழ் குற்றவியல் தண்டனைக்கு உட்படுத்துகின்ற அத்தகைய மீறுகை அல்லது தவறியமை எனப் பொருள்படுதல் வேண்டும் ;

"ஆள்" என்பது, அரசாங்கத்தின் ஏதேனும் திணைக்களத்தின் எவரேனும் அதிகாரி மற்றும் ஏதேனும் எழுத்திலான சட்டத்தின் மூலம் அல்லது கீழ் அல்லது வேறு வகையில் தாபிக்கப்பட்ட அல்லது அமைக்கப்பட்ட கூட்டிணைக்கப்பட்ட அல்லது கூட்டிணைக்கப்படாத ஆட்களின் ஏதேனும் குழுவினை உள்ளடக்கின்றது.

EOG 03 - 0128